கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023


முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர், தேதி: 10.10.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தேங்காய் மற்றும் கொப்பரை விலை நிலையாக இருக்கும் - தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது , தேங்காய் மற்றும் கொப்பரைக்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது.

தேங்காய் நம் நாட்டில் உணவு , இளநீர், நார்ச்சத்து, எரிபொருள் போன்ற தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகிறது. உலகில் இந்தோனேஷியா , பிலிப்பைன்ஸ், இந்தியா, பிரேசில் , இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகியவை தேங்காய் உற்பத்தியில் முன்னணியில் உள்ள நாடுகளாகும். வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் ( 2022-23) முதல் முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி , தென்னை சாகுபடி பரப்பளவு 21.77 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 135.18 இலட்சம் டன்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. தேங்காய் உற்பத்தியில் , நாட்டிலேயே தமிழகம் மூன்றாவது இடத்திலும், கர்நாடகா ( எக்டருக்கு 5.91 மெட்ரிக் டன்) மற்றும் கேரளா ( எக்டருக்கு 5.04 மெட்ரிக் டன்) ஆகிய மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழ்நாடு தேங்காய் உற்பத்தி திறனில் (எக்டருக்கு 7.87 மெட்ரிக் டன் ) முதலிடத்தி லும் உள்ளது. தமிழ்நாட்டில் , கோயம்புத்தூர் , திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் தென்னை அதிகளவு சாகுபடி செய்யபடுகிறது.

தற்போது, கிருஷ்ணகிரி, தர்மபுரி, பொள்ளாச்சி, பல்லடம், ஈரோடு, திருப்பூர், சேலம், காங்கயம், தேனி ஆகிய பகுதிகளில் இருந்து தமிழக சந்தைக்கு வரத்து வருவதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இம்மாவட்டங்களில் இருந்து தேங்காய் மற்றும் கொப்பரை வரத்து ஏற்கனவே வரத் தொடங்கியுள்ள நிலையில் கேரளா, கர்நாடகாவில் இருந்தும் வரத்து செப்டம்பர்'23 மாதத்திலிருந்து வரத் தொடங்கியுள்ளது.

தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் சந்தை தேவையில் ஏற்படும் மாற்றங்களால் கொப்பரை விலை மாறுபடுகிறது. இருப்பினும், இறக்குமதி செய்யப்பட்ட தாவர எண்ணெய்களினால் மற்ற உள்நாட்டு சமையல் எண்ணெய்களின் விலையில் ஏற்படும் தாக்கத்தைப் போலவே, தேங்காய் எண்ணெயின் விலையும் தாக்கத்திற்குள்ளாகும்.

மேலும், விலை முன்னறிவிப்புத் திட்ட குழு, கடந்த 15 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மற்றும் பெருந்துறை வேளாண் உற்பத்தி கூட்டுறவு மையத்திலும் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், டிசம்பர் 2023 இல் நல்ல தரமான தேங்காயின் பண்ணை விலை ரூ.10 முதல் 12 வரை இருக்கும் மற்றும் நல்ல தரமான கொப்பரை விலை கிலோவிற்கு ரூ. 80 இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. பிற மாநிலங்களில் இருந்து வரும் வரத்தை பொறுத்து விலையில் மாற்றங்கள் இருக்கலாம். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


1. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
   வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-2431405
2. இயக்குனர் மற்றும் ஒருங்கிணைப்பு அதிகாரி
   நீர்மற்றும் புவியியல் ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-6611278


**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641003
தொலைபேசி : 0422-6611284


***மக்கள் தொடர்பு அலுவலர்***